# பாடம் 3: விசுவாச வைப்பு

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், இந்த உலகம் ஒரு நுண்ணறிவுள்ள படைப்பாளரைக் கொண்டுள்ளது மற்றும் விபத்தினால் இருத்தலுக்கு வரவில்லை என்பதை நாம் எப்படி அறிய முடியும் என்று நாம் விவாதித்தோம். ஆனால் இந்த படைப்பாளர் மனிதகுலத்திற்கு தம்மை அறிமுகம் செய்து கொண்டாரா? இந்த அமர்வில், இந்த நுண்ணறிவுள்ள படைப்பாளர் அவரை அறிந்து கொள்வதை நமக்கு எப்படி சாத்தியமாக்கினார் என்று நாம் பார்ப்போம்.

**தற்போதைய பாடம்:**
1. கத்தோலிக்க விசுவாசத்தில், இந்த படைப்பாளர் (கடவுள்) தம்மைப் பற்றிய அறிவை கத்தோலிக்கத் திருச்சபையில் வைத்துள்ளார் என்று நாம் நம்புகிறோம். இந்த அறிவே இறை வார்த்தை அல்லது விசுவாச வைப்பு என்று அழைக்கப்படுகிறது.

2. இறை வார்த்தை ஒரு தலைமுறை நம்பிக்கையாளர்களிடம் இருந்து அடுத்தவர்களுக்கு மதிப்புமிகு அணிகலனாக கையளிக்கப்படுகிறது. திருச்சபை இந்த விசுவாச வைப்பைப் பாதுகாத்து கடத்துவதால் அனைத்து தலைமுறை மக்களும் கடவுளை அறியலாம்.

3. விசுவாச வைப்பு அல்லது இறை வார்த்தைக்கு இரண்டு முக்கிய மூலங்கள் இருக்கின்றன. அவை புனித மறைநூல் மற்றும் புனித மரபு. இரண்டு அம்சங்களுமே சமமான முக்கியத்துவம் கொண்டவை என்பதோடு இணைந்து வந்து இறை வார்த்தை முழுவதையும் கட்டமைக்கிறது. புனித மறைநூல் எழுத்து வடிவில் கையளிக்கப்பட்ட விசுவாசம் குறித்த படிப்பினைகளின் கொண்டுள்ளது, புனித மரபு திருச்சபை வாய்மொழி வழியாகக் கையளித்த படிப்பினைகளைக் கொண்டுள்ளது.

கதிம 76: ‘‘ஆண்டவரின் கட்டளையைக் கடைபிடிக்க, நற்செய்தி இரண்டு விதங்களில் கையளிக்கப்பட்டது:

- வாய்மொழியாக ‘திருத்தூதர்கள் கையளித்தனர், அவர்களது போதனையின் வார்த்தை வழியாக, அவர்கள் வழங்கிய எடுத்துக்காட்டின் வழியாக, அவர்கள் ஏற்படுத்திய அமைப்புகள் வழியாக, அவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்டதை -- கிறிஸ்துவின் உதடுகளில் இருந்தோ, அவரது வாழ்வுமுறை மற்றும் அவரது பணிகளில் இருந்தோ, அல்லது தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் கற்றுக் கொண்டதை’.
- எழுத்தில் ‘திருத்தூதர்கள் மற்றும் திருத்தூதர்களோடு தொடர்புடைய மற்ற மனிதர்கள் வழியாக, அதே தூய ஆவியின் ஏவுதலின் கீழ், மீட்பின் செய்தியை எழுத அர்ப்பணித்தனர்.’’’

கதிம 80: ‘‘‘புனித மரபும் புனித மறைநூலும், நெருக்கமாகச் சேர்ந்து பிணைந்துள்ளன, மேலும் ஒன்று மற்றதோடு தொடர்பு கொண்டுள்ளன. அவை இரண்டும், ஒரே இறை ஊற்றில் இருந்து வழிந்தோடுகின்றன, ஒரு பொருளை உருவாக்க குறிப்பிட்ட நடையில் சேர்ந்து வருகின்றன, மேலும் ஒரே இலக்கை நோக்கி நகர்கின்றன.’ அவை ஒவ்வொன்றும், தமக்குச் சொந்தமானவர்களோடு ‘எப்பொழுதும், காலத்தின் நிறைவு வரை’ இருப்பதாக வாக்களித்த கிறிஸ்துவின் மறைபொருளான திருச்சபையில் இருந்து பலனளிக்கின்றன.

கதிம 81: ‘‘‘புனித மறைநூல் தூய ஆவியின் மூச்சின் கீழ் எழுதப்பட்டது என்பதால் கடவுளின் பேச்சாக இருக்கிறது.’ ‘மேலும் இறை வார்த்தையின் முழுமையில் கடத்தப்படும் தூய மரபு, ஆண்டவராகிய கிறிஸ்து மற்றும் தூய ஆவியால் திருத்தூதர்களிடம் ஒப்படைக்கப் பெற்றது. அது திருத்தூதர்களின் வழிவந்தோரிடம் கடத்தப்படுவதால், உண்மையின் ஆவியால் ஒளியூட்டப் பெற்று, அவர்கள் விசுவாசத்துடன் பாதுகாத்து, விளக்கம் அளித்து, தங்களது போதனையால் அதை தொலைவிற்குப் பரப்புவர்.’’’

4. புனித மறைநூலும் புனித மரபும் திருத்தூதர்களின் காலத்தில் இருந்தே ஒரு தலைமுறை நம்பிக்கையாளர்களிடம் இருந்து அடுத்தவர்களுக்கு கையளிக்கப்பட்டு வருகின்றன, மேலும் இது புனித ஆசிரியத்தால் கவனிக்கப்படுகிறது. புனித ஆசிரியம் என்பது திருத்தந்தையும் அவரோடு ஒன்றிப்பு கொண்ட உலகெங்கும் உள்ள அனைத்து ஆயர்களும் சேர்ந்த திருச்சபையின் அலுவற்பூர்வ கற்பிக்கும் அதிகாரம் ஆகும். ஒரு தலைமுறையில் இருந்து அடுத்ததற்கு கையளிக்கப்படும் திருச்சபையின் படிப்பினைகள் துல்லியமானவை என்பதை ஆசிரியம் உறுதி செய்கிறது.

கதிம 85: "'இறை வார்த்தைக்கு அதிகாரப்பூர்வ விளக்கம் தருகின்ற பணி, அது எழுத்து வடிவில் அல்லது மரபு வடிவில் எப்படி இருந்தாலும், திருச்சபையின் வாழும் ஆசிரிய அலுவலிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த காரியத்தில் அதன் அதிகாரம் இயேசு கிறிஸ்துவின் பெயரால் பயன்படுத்தப்படுகிறது.' அதன் பொருள் பேதுருதுவின் வழிவந்தவரான ரோமையின் ஆயருடன் ஒன்றிப்பில் உள்ள ஆயர்களிடம் இந்த விளக்கப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது."

கதிம 86: "'இன்னும் இந்த ஆசிரியம் இறை வார்த்தைக்கு மேலானது இல்லை, மாறாக அதன் பணியாளராக இருக்கிறது. இதற்கு கொடுக்கப்பட்டதை மட்டுமே இது கற்பிக்கிறது. இறை கட்டளையாலும் தூய ஆவியின் உதவியோடும், இது அதற்கு பற்றுணர்வுடன் செவிசாய்த்து, அர்ப்பணிப்புடன் அதைப் பாதுகாத்து, விசுவாசத்துடன் அதை விளக்குகிறது. இறை வெளிப்பாடாக நம்புவதற்கு இது முன்மொழிவது எல்லாம் ஒற்றை விசுவாச வைப்பில் இருந்து எடுக்கப்பட்டதாக இருக்கிறது.'"

5. விவிலியமே புனித மறைநூலாக இருக்கிறது, அதாவது, எழுத்து வடிவில் நமக்கு கடத்தப்பட்ட இறை வார்த்தை. தூய ஆவியின் ஏவுதலால் பல வேறுபட்ட ஆசிரியர்களால் பல நூற்றாண்டுகளாக எழுதப்பட்ட பல நூல்களை உள்ளடக்கிய விவிலியம், மனிதகுலம் எப்படி வீழ்ந்து இறை உதவியின் தேவைக்கு ஆளானது, மேலும் நமது இக்கட்டில் இருந்து நம்மை மீட்க கடவுள் எப்படி திட்டமிட்டார் என்பதைக் கூறுகிறது.

கதிம 104: "புனித மறைநூலில், திருச்சபை நிலையாக தனது ஊட்டத்தையும் வலிமையையும் பெறுகிறாள், அதை மனித வார்த்தையாக அன்றி, 'அது இருக்கிறவாறு, இறை வார்த்தையாக' அவள் வரவேற்கிறாள். 'புனித நூல்களில், விண்ணகத்தில் இருக்கிற தந்தை அன்புடன் தமது பிள்ளைகளைச் சந்திக்க வருகிறார், மேலும் அவர்களுடன் பேசுகிறார்.'"

கதிம 106: "புனித நூல்களின் மனித ஆசிரியர்களை கடவுளே ஏவினார். 'புனித நூல்களைத் தொகுக்க, கடவுள் குறிப்பிட்ட மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, எல்லா நேரத்திலும் அந்தப் பணியில் அவர்களை ஈடுபடுத்தினார், அவர்களின் சொந்த திறமைகள் மற்றும் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்தியதால், அவர்களில் அவர்கள் வழியாக அவர் செயல்பட்டாலும், அவர் எவற்றை எழுத விரும்பினாரோ, அதன் உண்மை ஆசிரியர்களாக அவர்கள் எழுதுமாறு ஒப்படைத்தாரே அன்றி வேறெதுவும் இல்லை.'"

6. கத்தோலிக்க விவிலியம் பழைய ஏற்பாட்டில் 46 நூல்களையும் (இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு எழுதப்பட்ட நூல்கள், இவை அனைத்தும் அவரது வருகையை முன்னுரைக்கின்றன), புதிய ஏற்பாட்டில் 27 நூல்களையும் (இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு பின்பு எழுதப்பட்ட நூல்கள்) (கதிம 120). பழைய ஏற்பாடு முதலில் எபிரேயம் மற்றும் அரமேயத்தில் எழுதப்பட்டது, அதே சமயம் புனித ஏற்பாடு முதலில் கிரேக்கத்தில் எழுதப்பட்டது. எனினும், பழைய ஏற்பாட்டு நூல்களில் ஏழு முதலில் கிரேக்கத்தில் எழுதப்பட்டன, அவை "இணைத்திருமுறை" நூல்கள் (பொருள்: "இரண்டாம் திருமுறையைச் சார்ந்தவை") என்று அழைக்கப்படுகின்றன. விவிலியம் நூற்றுக்கணக்கான வேறுபட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதால் வேறுபட்ட பண்பாடுகளைச் சார்ந்த மக்கள் கடவுளைப் பற்றி அறிய முடியும்.

கதிம 133: திருச்சபை "கட்டாயமாகவும் தனிப்பட்ட விதத்திலும் அனைத்து கிறிஸ்தவ விசுவாசிகளையும் … இறை மறைநூல்களை அடிக்கடி வாசித்து, இயேசு கிறிஸ்துவைப்

பற்றிய மேலான அறிவைக் கற்க ஊக்குவிக்கிறது. மறைநூல்களை அறியாதது கிறிஸ்துவை அறியாததாக இருக்கிறது.''

7. புனித மரபு என்பது இயேசு கிறிஸ்து மற்றும் அவரது திருத்தூதர்களால் எழுதப்பட்டதாக அன்றி மற்ற வடிவங்களில் வழங்கப்பட்ட போதனைகள் மற்றும் பழக்கங்களைக் குறிக்கிறது. இந்த வழங்கப்பட்ட மற்ற வடிவங்கள் என்பவை சில நிறுவப்பட்ட செபங்கள், கலை, செயல்கள், திருச்சபை சங்கங்களின் படிப்பினைகள், நம்பிக்கைகள் போன்றவையாக இருக்கலாம்.

கதிம 82: ''இதன் விளைவாக, வெளிப்பாட்டினைக் கடத்துதல் மற்றும் விளக்கமளித்தல் ஆகியவை ஒப்படைக்கப்பட்டுள்ளத் திருச்சபை, 'வெளிப்படுத்தப்பட்ட அனைத்து உண்மைகள் பற்றிய உறுதிப்பாட்டை தூய மறைநூல்களில் இருந்து மட்டும் பெறவில்லை. மறைநூல் மற்றும் மரபு இரண்டுமே பக்தி மற்றும் மரியாதையின் சமமான உணர்வுகளுடன் ஏற்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும்.'''

கதிம 83: ''இங்கு கேள்விக்குள்ளாகும் மரபு என்பது திருத்தூதர்களிடம் இருந்து வருகிறது, இயேசுவின் படிப்பினை மற்றும் எடுத்துக்காட்டில் இருந்து அவர்கள் பெற்றது மற்றும் தூய ஆவியிடம் இருந்து அவர்கள் கற்றதைக் கையளித்தனர். முதல் தலைமுறை கிறிஸ்தவர்கள் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை, மேலும் புதிய ஏற்பாடு தன்னிலேயே வாழும் மரபின் செயல்முறையை வெளிக்காட்டுகிறது.''

8. உங்கள் மறைக்கல்வி பயணம் படிப்படியாக விசுவாசத்தின் வைப்புக்குள் தொடங்கப் பெற்றுள்ளதால், உங்கள் கத்தோலிக்க விசுவாசம் வெறும் பகுத்துணர் அறிவாக மட்டுமின்றி, வாழ்வின் வழியாகவும் ஆகும்.

9. நமது கத்தோலிக்க வாழ்வுக்கு திருச்சபையின் விசுவாசத்தில் நம்மைத் தொடர்ந்து ஆழப்படுத்துவது தேவைப்படுகிறது. ஆனால் நாம் இன்னும் புரிந்துகொள்ளாத காரியங்களிலும், அவற்றை நாம் முதலில் விசுவாசத்தினால் தழுவ அழைக்கப்படுகிறோம், பின்பு நாம் இன்னும் புரிந்துகொள்ள வேண்டியதைப் புரிந்துகொள்ளத் தேடுவோம். இதற்காக நமக்கு தனிப்பட்ட தீர்ப்பிடல் உரிமைக்கு நம்மை மறுத்தல் தேவைப்படுகிறது.

10. இந்த வழியில், கிறிஸ்தவ விவிலியத்தின் நம்பகத்தன்மையில் ஐயமுள்ள கிறிஸ்தவர் அல்லாத நண்பர்களை நீங்கள் சந்திக்கலாம், அது திரும்பத்திரும்ப நகலெடுக்கப் பெற்றதால், நகலெடுப்பில் பெரும் வழுக்கள் உள்ளதாக சிலர் நம்புகின்றனர். விவிலியம் லட்சக்கணக்கான தடவைகள் நகலெடுக்கப் பெற்றிருந்தாலும், இன்றைய நமது நகல்கள் நம்மிடம் உள்ள பழங்கால நகல்களுக்கு நம்பகத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன என்பதற்கு இன்று நாம் பல தொல்லியல் சான்றுகளைக் கொண்டுள்ளோம் (எடுத்துக்காட்டாக, சாக்கடல் சுருள்கள் மற்றும் பல்வேறு கைப்பிரதிகள்). பாடங்களின் வேறுபாடுகள் மிகவும் குறைவே, அவை பாடங்களின் பொருளை மாற்றவில்லை.

11. சீர்திருத்தக் கிறிஸ்தவ விவிலியத்தை விட கத்தோலிக்க விவிலியம் அதிக நூல்களைக் கொண்டதாகத் தெரிவதால், அதைப் பற்றி ஐயமுள்ள சீர்திருத்த நண்பர்களையும் நீங்கள் சந்திக்கலாம். வரலாறு காட்டுவது போன்று, புரோட்டஸ்டான்ட் சீர்திருத்தத்திற்கு முன்பு 1,500 ஆண்டுகளாக திருச்சபை எப்போதும் ஒருங்கிணைத்து வைத்திருந்த சில நூல்களை, 16ஆம் நூற்றாண்டில் அவற்றின் நிறுவனர்கள் ஏற்காததால் சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் அவற்றை நீக்கி விட்டனர் என்பதே உண்மை.

புரோட்டஸ்டான்ட் சீர்திருத்தத்தின் நிறுவனரான மார்ட்டின் லூத்தர், பழைய ஏற்பாட்டு இணைத் திருமுறை நூல்கள் ஏழினையும் நீக்கி விட்டார். அத்துடன், தமது ஜெர்மானிய விவிலிய மொழிபெயர்ப்பில் யாக்கோபு, எபிரேயர், திருவெளிப்பாடு மற்றும் யூதா ஆகிய புதிய ஏற்பாட்டு நூல்களையும் அவர் நீக்கினார். எனினும், பிற்காலத்தில் யாரோ ஒருவர் அந்த புதிய ஏற்பாட்டு நூல்களை (நாம் அறியாத காரணங்களுக்காக) மீண்டும் சேர்த்து விட்டார். இதன் காரணமாகவே, இன்றைய சீர்திருத்த விவிலியம் இணைத் திருமுறை நூல்கள் எதையும் பழைய ஏற்பாட்டில் கொண்டிருக்கவில்லை, ஆனால் புதிய ஏற்பாட்டு நூல்கள் கத்தோலிக்க விவிலியத்தின் அதே எண்ணிக்கையைக் கொண்டுள்ளன.

12. புனித மரபை இறை வார்த்தையின் பகுதியாகக் கருத வேண்டும் என்பதை ஏற்காத, நாம் மறைநூலில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று கற்பிக்கும் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர். ஆனால் இந்த கருத்தை விவிலியமே ஆதரிப்பது இல்லை. 2 தெசலோனிக்கர் 2:15ல், ''எங்கள் வாய்மொழி வழியாக அல்லது திருமுகம் வழியாக நாங்கள் கற்பித்த மரபுகளைக் கடைபிடியுங்கள்'' என்று புனித பவுல் தெசலோனிக்க கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துகிறார். 1 கொரிந்தியர் 11:2ல், ''நான் உங்களிடம் ஒப்படைத்த மரபுகளை நான் ஒப்படைத்தவாறே கடைபிடிக்கிறீர்கள்'' என்று கொரிந்திய கிறிஸ்தவர்களைப் புனித பவுல் பாராட்டுகிறார்.